## மார்ச் - 10 - சனி

### நாற்பது வேத சாட்சிகள்

### ஏனெனில், என் குற்றங்களை நான் உணர்கின்றேன்: திபா. 51:3

**முதல் வாசகம் : ஓசே 6 : 1 – 6**

"வாருங்கள், ஆண்டவரிடம் நாம் திரும்புவோம் நம்மைக் காயப்படுத்தியவர் அவரே, அவரே நம்மைக் குணமாக்குவார் நம்மை அடித்து நொறுக்கியவர் அவரே, அவரே நம் காயங்களைக் கட்டுவார். இரண்டு நாளுக்குப் பிறகு நமக்குப் புத்துயிர் அளிப்பார் மூன்றாம் நாளில் நம்மை எழுப்பி விடுவார் அப்பொழுது நாம் அவர் முன்னிலையில் வாழ்ந்திடுவோம். நாம் அறிவடைவோமாக, ஆண்டவரைப்பற்றி அறிய முனைந்திடுவோமாக் அவருடைய புறப்பாடு புலரும் பொழுதுபோல் திண்ணமானது மழைபோலவும், நிலத்தை நனைக்கும் இளவேனிற்கால மாரிபோலவும் அவர் நம்மிடம் வருவார்" என்கிறார்கள். எப்ராயிமே! உன்னை நான் என்ன செய்வேன்? யூதாவே! உன்னை நான் என்ன செய்வேன்? உங்கள் அன்பு காலைநேர மேகம் போலவும் கதிரவனைக் கண்ட பனிபோலவும் மறைந்துபோகிறதே! அதனால்தான் நான் இறைவாக்கினர் வழியாக அவர்களை வெட்டி வீழ்த்தினேன் என் வாய்மொழிகளில் அவர்களைக் கொன்று விட்டேன் எனது தண்டனைத் தீர்ப்பு ஒளிபோல வெளிப்படுகின்றது. உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகின்றேன் எரிபலிகளைவிட, கடவுளை அறியும் அறிவையே நான் விரும்புகின்றேன்.

**பதில்பாடல் :** பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன்

**நற்செய்தி : லூக்கா 18 : 9 - 14**

அக்காலத்தில் தாங்கள் நேர்மையானவர் என்று நம்பி மற்றவர்கள் இகழ்ந்து ஒதுக்கும் சிலரைப் பார்த்து இயேசு இந்த உவமையைச் சொன்னார். "இருவர் இறைவனிடம் வேண்டக் கோவிலுக்குச் சென்றனர். ஒருவர் பரிசேயர், மற்றவர் வரிதண்டுபவர். பரிசேயர் நின்று கொண்டு, இவ்வாறு இறைவனிடம் வேண்டினார் "கடவுளே, நான் கொள்ளையர், நேர்மையற்றோர், விபசாரம் போன்ற மற்ற மக்களைப் போலவோ இந்த வரிதண்டுபவரை போலவோ இல்லாதது பற்றி உமக்கு நன்றி செலுத்துகிறேன். வாரத்தில் இரு முறை நோன்பிருக்கிறேன் என்வருவாயில் எல்லாம் பத்திலொரு பங்கைக் கொடுக்கிறேன்." ஆனால் வரிதண்டுபவர் தொலையில் நின்று கொண்டு வானத்தை அண்ணாந்து பார்க்கக்கூடத் துணியாமல் தம் மார்பில் அடித்துக்கொண்டு, "கடவுளே, பாவியாகிய என்மீது இரங்கியருளும்" என்றார்." இயேசு, "பரிசேயரல்ல, வரிதண்டுபவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி வீடு திரும்பினார். ஏனெனில் தம்மைத் தாமே உயர்த்துவோர் தாழ்த்தப்பெறுவர் தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்" என்றார்.

**தியானம்:** இன்றைய நற்செய்தி பாவிகள் என்று எமதுள்ளத்தின் ஆழத்திலிருந்து எழுகின்ற உணர்வோடு இறைவனை நோக்கி ஜெபிக்கப் படிப்பிக்கின்றது. எமது சொல், செயல் அனைத்திற்கும் ஒருகாரணத்தைச் சொல்லி மனிதரிடமும், இறைவன் முன்னிலையிலும் நியாயப்படுத்த முனைவதனை பரிசேயரது வேண்டுதலில் நாம் காணமுடிந்தாலும், "பாவியான என்மீது இரங்கியருளும்" என்றவரே கடவுளுக்கு ஏற்புடையவராகி "வீடுதிரும்பினார்" என்ற இயேசுவின் வார்த்தைகள் இத்தவக்காலத்தில் ஆழமாக சிந்திக்க வைக்கின்றன. தனது செயல்கள், நடத்தையால் பரிசேயன் அகந்தை, இறுமாப்பு உடையவனுமாக இறைவன் சந்நிதியில் அறிக்கை செய்கின்றான். ஆனால் வரிதண்டுபவனோ தன்னைத் தாழ்த்தி தனது இயலாத்தன்மையின் பெலவீனத்தை ஏற்றுக்கொள்கின்றான். இத்தவக்காலத்தில் மட்டுமல்ல, எக்காலத்திலும் எமது வெளிவேட வாழ்க்கையை வெறுத்தொதுக்குவோம். நாமும் விசுவாசிகள் என்று கூறிக்கொண்டு ஆசாரங்களுக்கும், சடங்குகளுக்கும் மற்றும் எமது கருத்துக்களுக்கு முதலிடம் கொடுப்பதனை தவிர்ப்போம். எமது ஈடேற்றத்திற்காக ஆண்டவர் இயேசு கல்வாரியில் நிறைவேற்றிய மாபெரும் பரிசுத்தமான உன்னத செயல் திருப்பலி வேளைகளில் புதுப்பிக்கப்படுகின்றதென நம்பி விசுவசிப்போம். எம்மைத் தாழ்த்தி, எமது இயலாத் தன்மையை உணர்ந்து, எம்மை முற்றுமுழுதாக வெறுமையாக்கி "கடவுளே உமது பேரன்பிற்கேற்ப எனக்கு இரங்கும்" என இறைபாதம் சரணடைவோம். நாம் இறைவனிடம் மன்றாடிக் கேட்கும் அனைத்து வரங்களும் ஆண்டவர் இயேசுவின் கல்வாரிப்பலி வழியாக எம்மிடம் பாய்ந்தோடி வருகின்றது. அதற்காக இத்தவக்காலம் நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்வதற்கென எமக்கு ஒரு அருமையான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இறை இரக்கத்தின் அரசரான ஆண்டவர் இயேசு இருகரம் நீட்டியவராக எம்மை வரவேற்கத் தயாராக உள்ளார். அவரைப்பற்றிய உண்மைகளை நாம் உணர்ந்தறிந்த பின்னரும் ஏன் தாமதிக்க வேண்டும். நித்தியமா? அல்லது அநித்தியமா? தெரிவு எம்முடையது.